**S.C.No. 198/2025 நாள் 28.04.2026 PW1 – திரு. மாரிமுத்து**

(சாட்சி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை CRL.OP(MD) No.2645/2024 வழக்கில் 02.04.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, நீதிமன்றத்தில் மீண்டும் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

சம்பவம் நடந்த இடத்திலிருந்து முத்தையாபுரம் காவல்நிலையத்திற்கு 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். சம்பவம் நடந்து முடிந்த பின்பு எத்தனை மணிக்கு முத்தையாபுரம் காவல்நிலையம் சென்றேன் என்றால் 7.30 மணிக்கு சம்பவம் நடந்தது, 8.00 மணிக்கு போனேன். காவல்நிலையத்திற்கு போன உடனே புகார் வாக்குமூலம் கொடுக்க ஆரம்பித்துவிட்டேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் போலீசாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ–1 புகார் வாக்குமூலத்தில் என் அப்பாவின் பிரேதம் சம்பவ இடத்தில் கிடக்கிறது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகுதான் முத்தையாபுரம் போலீசாருடன் சம்பவ இடத்திற்கு போனேன் என்றால் சரிதான். நான் புகார் கொடுக்கும் முன்பே பெண் காவலர் சம்பவ இடத்திற்கு போய்விட்டார்கள். நான் சம்பவ இடத்திற்கு போலீசாருடன் செல்லும்போது ஆய்வாளர் என்னுடன் வரவில்லை என்றால் சரிதான். நான் புகார்கொடுத்துவிட்டு வீட்டுக்கு செல்லும்போது 8.30 மணிமுதல் 9.00 மணி ஆகிவிட்டது. சம்பவம் நடந்த அன்று எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் 9.00 மணிக்குத்தான் காவல்நிலையத்திலிருந்து கிளம்பினேன். சம்பவம் நடந்த அன்று 9.30 மணிக்கு வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் 9.00 மணிக்கு காவல்நிலையத்திலிருந்து கிளம்பினேன்

வீட்டிற்கு சென்ற நேரம் சரியாக நினைவில்லை. நான் காவல்நிலையம் சென்றுவிட்டு சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்திப்பேன் என்று எனக்கு நினைவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து காவல்துறையினர் என்னை யாராவது விசாரித்தார்களா என்றால் நினைவில்லை. நான் சம்பவ இடத்திற்கு இரண்டாவதாக 9.00 மணிக்கு செல்லும்போது அ.சா.3 எனது பெரியப்பா வேலாயுதம் இருந்தாரா என்றால் நினைவில்லை. சம்பவம் நடந்த மறுநாள் அரசுமருத்துவமனைக்கு நான் போனேனா என்றால் போகவில்லை. சம்பவம் நடந்த மறுநாள் வேறு சாட்சிகளும் அரசுமருத்துவமனைக்கு போகவில்லை என்றால் நினைவில்லை. கோவில் கொடை விழாவில் ஏற்பட்ட பிரச்சனை மட்டுமே முன்விரோதத்திற்கு காரணம் என்று சொல்லி நான் கொடுத்த புகார்வாக்குமூலத்திலும், முதல்விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1,2 எதிரிகளுக்கும் என் அப்பாவிற்கும் வேறு எந்த பிரச்சனையும் இல்லை என்பதால் புகாரிலும், ஆய்வாளர் விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கோவில் கொடை விழாவில் 1ம் எதிரி கையில் உள்ள கத்தியை என் பெரியப்பா அ.சா.3 வேலாயுதம் சத்தம் போட்டு 1ம் எதிரியிடமிருந்து பிடிங்கினார் என்று முதல்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிரியிடமிருந்து கோவில் கொடை விழாவில் கத்தியை பிடிங்கிய வேலாயுதத்திடம் எதிரிகள் விரோதம் எதுவும் பாராட்டவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று 2 இடத்தில் வைத்து வெட்டு விழுந்தது என்றால் சம்பவம் நடந்த அன்று ஒரே ஒரு இடத்தில் வைத்து வெட்டு விழுந்தது. சுதா சலூன் கடையை தவிர வேறு எந்த இடத்தில் வைத்தும் என் அப்பாவிற்கு வெட்டு விழவில்லை என்றால் சரிதான். வெட்டுவிழுந்தது சுமார் எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 15 நிமிடங்கள் ஆகியது, 10 வருடங்கள் ஆகியதால்

ஞாபகமில்லை. வெட்டு விழுந்தவுடனே என் அப்பா உடம்பு முழுவதும் இரத்தமாகிவிட்டது என்றால் சரிதான். உடம்பு முழுவதும் இரத்தமாகி என் அப்பா தரையில் கிடந்ததால் என் அப்பாவின் உடலின் எந்த எந்த பாகங்களில் துல்லியமாக பார்க்கமுடியாது என்றால் சரியல்ல, அவருடைய தொடை, முழங்கை, கழுத்து, மத்தி விரல் ஆகியவைகளில் வெட்டு ஏற்பட்டது, கால்களை இழுத்து போட்டு வெட்டினார்கள். என் அப்பாவை வெட்டும்பொழுது நாங்கள் தடுக்கவில்லை என்றால் எனது பெரியப்பா என்னை பிடித்து விட்டார், எதிரி முண்டன் என்ற மாரியப்பன் அருகில் வந்தால் வெட்டிவிடுவேன் என்று மறித்ததால் பிடித்துவிட்டார். என் பெரியப்பா ஒரே நேரத்தில் எங்கள் இருவரையும் பிடித்தார்களா என்றால் என்னையும், என் தம்பியையும் பிடித்தார். நானும், மற்ற சாட்சிகளும் எதுவும் பேசவில்லை என்றால் அவர்கள் அரிவாளை வைத்து ஓங்கி கொண்டிருந்ததால் எதுவும் பேசவில்லை. எங்களை எதிரிகள் தாக்கவில்லை என்றால் தாக்க வந்தார்கள். எங்கள் மீது சிறிய காயங்கள் எதுவும் வரவில்லை என்றால் சரிதான், என் பெரியப்பா பிடித்துவிட்டார். கொடை விழாவில் 1ம் எதிரியிடமிருந்து அ.சா3 வேலாயுதம் கத்தியை பிடிங்கிய பற்றி சம்பவ இடத்தில் வைத்து எதிரிகள் எதுவும் பேசினார்களா என்றால் 10 வருடங்கள் ஆனதால் நினைவில்லை. சம்பவ இடத்தில் கிடந்த என் அப்பா உடல் மீது நானோ, மற்ற சாட்சிகளோ விழுந்து அழுதோமா என்றால் உடல் மீது விழுந்து அழவில்லை, கையை பிடித்து அழுதேன். மற்ற சாட்சிகள் என் அப்பா உடல் மீது விழுந்து அழுதார்களா என்றால் இல்லை. அ.சா.1, 2,3 ஆகியோர்கள் அணிந்திருந்த உடைகளில் இரத்தம் படவில்லை என்றால் எங்கள் மீது படவில்லை, வெட்டியவர்கள் மீது பட்டது. சம்பவத்தன்று மதியம் என் அப்பா அத்திமரப்பட்டி வீட்டில் வைத்துதான் சாப்பிட்டார் என்றால் மாலை 5.00 மணிக்கு சாப்பிட்டார்.

சம்பவம் நடந்த அன்று என் அப்பா முக்காணிக்கு போனாரா என்றால் செல்லவில்லை. எனது பெரியப்பாவை முக்காணிக்கு பஸ் ஏற்றி விடுவதற்காக அத்திமரப்பட்டியிலிருந்து வந்தோம். சம்பவத்தன்று மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றோம் என்றால் சரிதான். முதல்முதலில் எதிரிகளை எவ்வளவு துாரத்தில் வைத்து பார்த்தேன் என்றால் நினைவில்லை. எதிரிகளை பார்த்தபிறகு எதிரிகள் எங்களை தாக்குவார்கள் என்று நினைத்தோமா என்றால் நினைத்தோம். எதிரிகளை பார்த்தபிறகு நாங்கள் யாரும் அந்த இடத்தை விட்டு தப்பிசெல்ல முயற்சிசெய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.பொ.8 முதல் 10 அரிவாள்கள் சம்பவ நேரத்தில் யாருடைய கையில் இருந்தது என்று தற்போது என்னால் சொல்ல முடியாது என்றால் முடியும். அ.சா.பொ. 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அரிவாள் எதிரி மல்லி என்ற மலையாண்டி பயன்படுத்திய அரிவாளாகும். அ.சா.பொ. 9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அரிவாள் எதிரி முத்து என்ற பழைய முத்து பயன்படுத்திய அரிவாளாகும். அ.சா.பொ. 10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அரிவாள் எதிரி முண்டன் என்ற மாரியப்பன் பயன்படுத்திய அரிவாளாகும். அ.சா.8 முதல் 10 அரிவாள்கள் என் அப்பாவை வெட்டுவதற்கு பயன்படுத்தப்படவில்லை என்றாலும், அது போலீசாரால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. அ.சா.பொ.13, 15 சட்டைகள் சம்பவத்தின்போது 1,2 எதிரிகள் அணிந்தவை அல்ல என்றால் சரியல்ல. அ.சா.பொ.14,16 சாரம் 1,2 எதிரிகள் அணிந்தவை அல்ல என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லும் அ.சா.பொ. 5 செல்போன் என் அப்பாவுடையது அல்ல என்றால் சரியல்ல. அ.சா.பொ.7 வரிசை செருப்புகள் எதிரிகளுக்கு சொந்தமானவை அல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிரி மலையாண்டி என்ற மல்லி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று

தெரியுமா என்றால் 10 வருடங்களுக்கு முன்பு அவர் நல்ல மனநிலையில்தான் இருந்தார், தற்போது அவருடைய மனநிலையை பற்றி எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்தில் இவ்வழக்கில் Crl.M.P.5888/2024 மனுவில் சாட்சியம் அளித்த அரசுமனநல மருத்துவர் புவனேஸ்வரன் 18.10.2024 அன்று 1ம் எதிரியை பரிசோதித்ததாகவும், அவரை பரிசோதனை செய்து பார்த்ததில் அவருக்கு 10 வருடங்களாக மனநல பாதிப்பு இருந்தது கண்டறியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10.06.2015 அன்றும் 1ம் எதிரி மனநல பாதிப்புடன்தான் இருந்தார் என்றால் இல்லை. 03.06.2015 அன்று கொடை விழா நடந்தது என்றும், அந்த கொடை விழாவில் 1ம் எதிரியிடமிருந்து அரிவாளை பிடிங்கி விட்டார் என்பது பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிரி படப்பிலிருந்து கத்தியை எடுத்து அப்பாவை குத்த வந்தார் என்பதும், அதை என் பெரியப்பா மற்றும் சித்தப்பா சத்தம்போட்டு பிடிங்கிவிட்டார் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிரி, 2ம்எதிரியிடம் எனது அப்பா அரிவாளை பிடிங்கிய விவரத்தை சொன்னார் என்பதும், 2ம் எதிரி அவனை வெட்டி பொழிப்போட்டுவிடுவோம் என்றார் என்பதும் பொய் என்றால் சரியல்ல. 10.06.2015 அன்று நான், அ.சா.2,3 எனது அப்பா ஆகியோர்கள் அத்திமரப்பட்டி விலக்கிற்கு வந்தோம் என்றும், 1,2,3 எதிரிகள் கையில் அரிவாளுடன் நின்று கொண்டிருந்தார்கள் என்பதும், 1,2 எதிரிகள் அரிவாளால் என் அப்பாவை வெட்டி காயப்படுத்தினார் என்பதும், 3ம் எதிரி வெட்டருவாளை காட்டி வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார் என்றுசொல்வதும் பொய் என்றால் சரியல்ல. காவல்நிலையம் சென்று உடனடியாக புகார்வாக்குமூலம் கொடுத்தேன் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. 1,2 எதிரிகள் ஒரு பைக்கிலும், 3ம் எதிரி டிவிஎஸ் எக்ஸல்

வண்டியிலும் ஏறி போய்விட்டார்கள் என்பதும் பொய் என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் நான் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்த தகவல் போலீசார் சொல்லிதான் எனக்கும், அ.சா.2,3 க்கும் தெரியும் என்றுசொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது என் அப்பா உடல் சம்பவ இடத்திலேயே கிடையாது என்றுசொன்னால் சரியல்ல. என் அப்பா செய்யக்கூடிய அடாவடிதனத்தினால் என் அப்பாவிற்கு அத்திமரப்பட்டியிலும், முக்காணியிலும் நிறைய எதிரிகள் இருந்தார்கள் என்றால் சரியல்ல, என் அப்பாவிற்கு எந்த வழக்கும் கிடையாது, எதிரிகளும் கிடையாது. அ.சா.ஆ.1 புகார் சம்பவம் நடந்த அன்று இரவு 11.00 மணிக்கு மேல் அரசு மருத்துவமனை மருத்துவரிடம் என் அப்பாவின் உடலில் உள்ள காயங்களை முழுமையாக போலீசார் தெரிந்துகொண்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா முக்காணி ஊருக்கு போய்விட்டு அத்திமரப்பட்டிக்கு திரும்பும்போது அடையாளம் தெரியாத நபர்களால் வெட்டி கொலை செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. நானும், அ.சா.2,3 ஆகியோர்களும் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முதலில் கொடுக்கப்பட்ட புகாரில் எதிரிகளின் பெயர்களே குறிப்பிடவில்லை என்றாலும், இரண்டாவதாக உற்பத்தி செய்யப்பட்ட புகாரில்தான் எதிரிகள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. முதலிலேயே எதிரிகள் பெயர்களை குறிப்பிட்டுத்தான் புகார் கொடுத்தேன். 2,3 எதிரிகள் என் அப்பாவின் அடாவடிதனத்தை தட்டி கேட்பதால் அவர்களை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி மனநலம் பாதிக்கப்பட்டு முக்காணி ஊரில் சில தவறுகள் செய்துள்ளதால் அவரையும் சந்தேகப்பட்டு இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. நான்

கொடுத்த புகாரை நான் சொல்ல சொல்லத்தான் போலீசார் எழுதினார்கள் என்றால் சரிதான். ஒருபக்கம் புகார் எழுத எவ்வளவு நேரம் ஆகியது என்றால் அது பற்றி நினைவில்லை. ஒருபக்கம் எழுத எவ்வளவு நேரம் ஆகியது என்று தற்சமயம் சொல்ல முடியாது என்றால் சரிதான். புகார் மொத்தம் 3 பக்கங்களுக்கு மேல் உள்ளது என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8 ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். புகாரின் 3 பக்கமும் வேறு ஒருவர் சொல்ல மற்றொருவர் எழுத எவ்வளவு நேரம் ஆகும் என்று தற்சமயம் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் எனக்கு உதவியாக தனியாக வழக்கறிஞர் நியமனம் செய்துள்ளேன்என்றால் இல்லை, அரசு வழக்கறிஞர்தான். ஆய்வாளர் விசாரிக்கும்போது கோவிலின் எட்டாம்பூஜை அன்று 10.06.2015 அன்று நான் அத்திமரப்பட்டியில் இருக்கும்போது என் பெரியப்பா வேலாயுதம் அவருடைய வயக்காட்டை பார்க்க எங்கள் ஊருக்கு வந்திருந்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் கொடுத்த புகாரிலும், ஆய்வாளர் விசாரணையிலும் சுமார் 7 மணியளவில் நானும், என் பெரியப்பா, என் அப்பா, என் தம்பி பாஸ்கர் ஆகியோர்கள் என் பெரியப்பாவை ஊருக்கு அனுப்புவதற்காக அத்திமரப்பட்டி விலக்கிற்கு வந்தோம் என்றுசொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு வந்து அ.சா.3 வேலாயுதத்தை பஸ் ஏற்றி விடுவதை தவிர வேறு வேலை எனக்கோ, என் அப்பாவிற்கோ கிடையாது என்றால் எனது பெரியப்பா பஸ் எற்றிவிட்டு விட்டு ஸ்நாக்ஸ் வாங்குவதற்கும், டீ குடிப்பதற்கும் வந்தோம். சம்பவ இடத்திற்கு வந்தது எனது பெரியப்பாவை பஸ் எற்றிவிட்டு விட்டு ஸ்நாக்ஸ் வாங்குவதற்கும், டீ குடிப்பதற்கும் என்றால் சரிதான். ஸ்நாக்ஸ் வாங்குவதற்கும், டீ குடிப்பதற்கும் வந்தோம் என்று புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். பஸ்

ஏற்றிவிடுவதற்காகத்தான் வந்ததாகத்தான் சொல்லியுள்ளேன். சம்பவ இடத்திற்கு வந்ததற்கு வேறு காரணம் இருந்ததாக ஆய்வாளர் விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் சம்பவ இடத்திற்கு என்ன காரணத்திற்காக வந்தேன் என்று புகாரிலும், ஆய்வாளர் விசாரணையிலும் நான் குறிப்பிட்டுள்ள விவரங்கள் நம்பும்படியாக இல்லாததால் அதை மாற்றிவிட்டு தற்சமயம் நீதிமன்றத்தில் புதியதாக ஒரு காரணத்தை சொல்லுகிறேன் என்றுசொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**S.C.No. 198/2025 நாள் 28.04.2026 PW2– திரு. பாஸ்கர்**

(சாட்சி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை CRL.OP(MD) No.2645/2024 வழக்கில் 02.04.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, நீதிமன்றத்தில் மீண்டும் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

முக்காணிஊருக்கும் ஆத்தூர் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1 ½ கி.மீ முதல் 2 கி.மீ இருக்கும். முக்காணி – அத்திமரப்பட்டி ஊருக்கு எத்தனை கி.மீ இருக்கும் என்றால் 8 கி.மீ தூரம் இருக்கும். முக்காணியிலிருந்து சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 7, 8 கி.மீ இருக்கும். சம்பவம் நடந்த இடத்திற்கும், எங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 கி.மீ இருக்கும். சம்பவம் நடந்த மறுநாள் தூத்துக்குடி அரசுமருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சென்றேன். முக்காணி கோவில் கொடை விழாவில் நடந்த பிரச்சனை சம்மந்தமாக என் அப்பாவோ, கோவிலை சேர்ந்தவர்களோ ஆத்தூர் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 03.06.2015 அன்று கோவில் கொடை விழா நடக்கவில்லை என்றாலும், கோவிலில் எந்த பிரச்சனையும் நடக்கவில்லை என்பதால்தான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றுசொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று முத்தையாபுரம் காவல்நிலையத்தில் நானும், எனது அண்ணனும் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார் 1 மணி நேரம் இருந்திருப்போம், 10 வருடங்கள் ஆனதால் நினைவில்லை. புகார் வாக்குமூலம் எழுதுவதற்கு எவ்வளவு நேரம் என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்தபிறகு சம்பவ இடத்திற்கு வந்தபோது யார் யார் இருந்தார்கள் என்று ஞாபகமில்லை என்றால் சரிதான். என் அப்பா உடம்பில் என்ன காயங்கள் இருந்தது என்பது மட்டும் நன்றாக

நினைவிருக்கிறது என்றால் இருக்கிறது. கோவில் கொடை விழாவில் 1ம் எதிரியிடமிருந்து அ.சா.3 வேலாயுதம் கத்தியை பிடிங்கியதாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். கத்தியை பிடிங்கிய அ.சா.3 வேலாயுதத்திடம் 1,2 எதிரிகள் விரோதம் எதுவும் பாராட்டவில்லை என்றால் பெரியப்பாவிடம் விரோதம் பாராட்டவில்லை, அப்பாவிடம் விரோதமாக இருந்தார்கள். கத்தியை பிடிங்கியதாக சொல்லும் அ.சா.3 வேலாயுதத்தை தாக்குவதற்கு யாரும் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று என் அப்பா முக்காணிக்கு போனார்களா என்றால் இல்லை. எங்கள் வீட்டிலிருந்துதான் அத்திமரப்பட்டிக்கு வந்தோம். சம்பவம் நடந்த அன்று அ.சா.3 வேலாயுதம் எங்கள் ஊருக்கு வந்தார்கள் என்றால் சுமார் 4.00 மணிக்கு வந்தார்கள். முக்காணியிலிருந்து அத்திமரப்பட்டிக்கு வரவேண்டுமென்றால் முத்தையாபுரத்தில் இறங்கி நடந்து வரவேண்டும் என்றால் ஸ்பிக்கில் இறங்கி நடந்துவரலாம். ஒரு வாரத்திற்கு எனது பெரியப்பா எத்தனை நாட்கள் எங்கள் ஊருக்கு வருவார் என்றால் நினைத்த நேரம் வருவார், நினைத்த நேரம் போவார். அத்திமரப்பட்டிக்கு அவர் வந்த காலங்களில் எல்லாம் அவரை பஸ் ஏற்றி விடும் பழக்கம் கிடையாது என்றால் எப்பொழுதுதெல்லாம் தோணுகிறதோ, அப்பொழுதெல்லாம் செல்வோம். எங்கள் துணையில்லாமலும் பஸ் ஏறி செல்வார் என்றால் சரிதான். சம்பவத்தன்று ஸ்பிக் நகரிலிருந்து எங்கள் ஊருக்கு வருவதற்கு யாரும் போய் கூப்பிட போகவில்லை என்றால் சரியாக தெரியவில்லை. நான் செல்லவில்லை. ஆய்வாளர் விசாரிக்கும்போது என் பெரியப்பா ஊருக்கு போக வேண்டுமென்று சொன்னதால் அவரை பஸ் ஏற்றி விடுவதற்காக நானும், எனது அப்பா, எனது அண்ணன் அ.சா.1 மாரிமுத்து, எனது பெரியப்பா வேலாயுதம் ஆகியோர்கள் சுமார் 6.30 மணி முதல் 6.45 மணிக்கு மேல் வீட்டிலிருந்து

கிளம்பினோம் என்றும், நாங்கள் 4 பேரும் என்பதால் நடந்தே பஸ் ஏற்றி விடுவதற்காக அத்திமரப்பட்டி விலக்கிற்கு வந்தோம் என்று சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். சம்பவ இடத்தில் வந்து அ.சா.3 வேலாயுதத்தை முக்காணி ஊருக்கு பஸ் ஏற்றிவிடுவதை தவிர வேறு எந்த வேலையும் என் அப்பாவிற்கு கிடையாது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வந்தது சம்மந்தமாக வேறு எந்த காரணத்தையும் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அப்பாவிற்கு வெட்டு விழும்போது நாங்கள் தடுத்தோமா என்றால் என் பெரியப்பா எங்களை பிடித்ததால் நாங்கள் தடுக்கவில்லை. என் பெரியப்பாவிற்கு என்ன வயது இருக்கும் என்றால் சம்பவ காலத்தில் என் பெரியப்பாவிற்கு 60 வயது இருக்கும். 60 வயதுள்ள பெரியப்பா என்னையும், என் அண்ணனையும் பிடித்ததால் நாங்கள் தடுக்கவில்லை என்றால் சரிதான். வெட்டப்பட்டு கீழே விழுந்த என் அப்பாவை தூக்கி பார்த்தோமா என்றால் இல்லை. எங்கள் உடையில் இரத்தம் எதுவும் படவில்லை என்றால் சரிதான். என் அப்பாவை வெட்டியது எத்தனை இடத்தில் வைத்து என்றால் என் அப்பாவை 2 இடத்தில் வைத்து வெட்டினார்கள். முதலில் வெட்டப்பட்ட இடத்திற்கும், இரண்டாவது வெட்டுப்பட்ட இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 50 அடிக்கு குறைவாக இருக்கும். நான் நின்று கொண்டிருக்கும் இடத்திலிருந்து Sessions Clerk அமர்ந்திருக்கும் இடம் வரை இருக்கும். முதல் வெட்டு விழுந்தபோதே இரத்தம் பீறிட்டு வந்தது என்றால் சரிதான். முதல்ல வெட்டுப்பட்ட இடத்திலிருந்து இரண்டாவதாக வெட்டுப்பட்ட இடம் வரை இரத்தம் சிந்திதான் இருந்தது என்றால் சரிதான். முதல்ல வெட்டுப்பட்ட இடத்திலும் தரையில் இரத்தம் சிந்திதான் இருந்தது என்றால் சரிதான். சம்பவத்தன்று எதிரிகளிடம் எதுவும் பேசவில்லை

என்றால் சரிதான். நாங்கள் எந்த திசையில் வந்தோம் என்றால் கிழக்கிலிருந்து மேற்காக வந்தோம். எதிரிகளை முதல் முதலில் சம்பவ இடத்தில் பார்த்தவுடன் நாங்கள் தப்பித்து ஓட முயற்சித்தோமா என்றால் எதிரிகள் சுற்றி வளைத்து என் அப்பாவை பின்னால் வெட்டியதால் என் அப்பா கீழே விழுந்துவிட்டார். நாங்கள் சென்றபோது எதிரிகள் சுற்றி விட்டதால் அந்த இடத்திலிருந்து ஓட முடியவில்லை. வெட்டு விழுந்தபிறகு உடனடியாக காவல்நிலையம் போய்விட்டோம் என்றால் சரிதான். காவல்நிலையத்திலிருந்து திரும்பி வரும்போது காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் இருந்தாரா என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்தில் வைத்து என்னையோ, மற்ற சாட்சிகளையோ ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். 10.06.2015 அன்று எனது பெரியப்பா அவருடைய வயல் நாங்கள் குடியிருக்கும் ஊரான அத்திமரப்பட்டியில் இருப்பதால் அங்கு பார்ப்பதற்காக எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லியிருந்தேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவ நேரத்தில் சம்பவ இடத்திற்கு என்ன காரணத்திற்காக நான் வந்தேன் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டது நம்பும்படியாக இல்லாததால் புதியதாக ஒரு காரணத்தை நீதிமன்றத்தில முதல்முறையாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சான்று பொருள் 8,9,10 அரிவாள்கள் சம்பவ இடத்தில் எதிரிகள் கையில் இருந்தது என்பது பொய் என்றால் சரியல்ல. சா.பொ. 8 முதல் 10 அரிவாள்கள் இறந்துபோனவரை தாக்குவதற்கு பயன்படுத்தியது அல்ல என்றால் சரியல்ல. அ.சா.13,14, 15, 16 உடைகள் எதிரிகளுக்கு சொந்தமானது அல்ல என்றால் சரியல்ல. அந்த உடைகளை எதிரிகள் எந்த சந்தர்ப்பத்திலும் அணிந்தது கிடையாது என்றால் சரியல்ல. 03.06.2015 ல் கிடா வெட்டும்போது 1ம்

எதிரியிடமிருந்து எனது அப்பா அரிவாளை பிடிங்கினார் என்றும், 1ம் எதிரி கத்தியை எடுத்து எனது அப்பாவை குத்த வந்தார் என்பதும், என்னுடைய பெரியப்பாவும், மற்றவர்களும் சத்தம் போட்டு கத்தியை பிடிங்கினார்கள் என்பதும் பொய் என்றால் சரியல்ல. 2ம் எதிரி பழையமுத்து உன்னிடமே அரிவாளை பிடிங்கிவிட்டானே கொடை முடியட்டும், அவனை கொலை செய்து விடுவோம் என்று சத்தம்போட்டார் என்பது பொய் என்றால் சரியல்ல. 10.06.2015 அன்று எனது பெரியப்பா அவருடைய வயலை பார்க்க அத்திமரப்பட்டி வந்தார் என்பதும், அவரை பஸ் ஏற்றிவிட நானும், எனது அப்பா, அ.சா.1 மாரிமுத்து எனது வீட்டிலிருந்து கிளம்பினோம் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிரி, 2ம் எதிரி, 3ம் எதிரி ஆகிய மூவரும் வெட்டருவாளை வைத்துக்கொண்டு என் அப்பாவிடம் 1ம் எதிரி தேவடியா மகனே உன்னைத்தான் வெட்ட வந்துள்ளோம் என்று வெட்ட வந்தான் என்றும், 2ம் எதிரி என் அப்பாவை இடது தொடையில் வெட்டினான் என்பதும், சுதா சலூன் கடை முன்பு விழுந்த என் அப்பாவை 1,2 எதிரிகள் மாறி மாறி வெட்டினார்கள் என்றுசொல்வது பொய் என்றால் சரியல்ல. 3ம் எதிரி கிட்ட வந்தால் உங்களையும் கொன்றுவிடுவோம் என்று மிரட்டியதால் நாங்கள் அருகில் செல்ல முடியவில்லை என்பது பொய் என்றால் சரியல்ல. அ.சா.3 வேலாயுதம் எங்களை புகார் வாக்குமூலம் கொடுக்க சொன்னார் என்றும், நாங்கள் புகார் கொடுக்க சென்றோம் என்பதும், அ.சா.1 மாரியப்பன் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்பதும், நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றுசொல்வதும் பொய் என்றால் சரியல்ல. அ.சா.ஆ–1 புகார் வாக்குமூலம் இரவு 11.00 மணிக்கு மேல் போலீசாரால் உருவாக்கப்பட்டது என்றுசொன்னால் சரியல்ல. அ.சா.பொ.7 வரிசை செருப்பு எதிரிகளுக்கு சொந்தமானது அல்ல என்றால் சரியல்ல. அ.சா.பொ.5 செல்போன் என் அப்பாவிற்கு

சொந்தமானது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் விரோதம் போலீசாரால் கற்பனையாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு முக்காணியிலும், அத்திமரப்பட்டியிலும் நிறைய விரோதிகள் உள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. அந்த விரோதிகள் எனது அப்பாவை வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்றுசொன்னால் சரியல்ல. 2, 3 எதிரிகள் எனது அப்பா செய்யும் அடாவடிதனத்தை தட்டிக்கேட்பதால் ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக அவர்களை பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரி மனநலம் பாதிக்கப்பட்டு முக்காணி ஊரில் சில தவறுகள் செய்துள்ளதால் அவரையும் சந்தேகப்பட்டு இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முதல் முதலாக கொடுக்கப்பட்ட புகார் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவல்துறை கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் சம்பவ இடத்திற்கு வந்தோம் என்று சொன்னால்சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

S.C.No. 198/2025 நாள் 28.04.2026 PW3– திரு. வேலாயுதம்

(சாட்சி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை CRL.OP(MD) No.2645/2024 வழக்கில் 02.04.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, நீதிமன்றத்தில் மீண்டும் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிதரப்பில்)

சம்பவம் நடந்து முடிந்தவுடன் நான் எங்கு போனேன் என்றால் சம்பவம் நடந்து முடிந்தவுடன் நான் சம்பவ இடத்திலேயே நிற்கிறேன். இரவு எத்தனை மணி வரை சம்பவ இடத்தில் நின்றேன் என்றால் இரவு 8.30 மணிவரை நின்றேன். அதன்பிறகு நான் முக்காணிக்கு சென்றேனா என்றால் அத்திமரப்பட்டிக்கு போனேன். சம்பவம் நடந்த அன்று அத்திமரப்பட்டிக்கு எத்தனை மணிக்கு போனேன் என்றால் சாயங்காலம் 4.30 மணிக்கு போனேன். என் மீது 1,2 எதிரிகள் எதுவும் விரோதம் பாராட்டவில்லை என்றால் சரிதான். கோவில் கொடை விழாவில் அரிவாளை பிடிங்கியவரிடம் மட்டும் 1,2 எதிரிகள் விரோதம் பாராட்டினார்கள், கத்தியை பிடிங்கியவர் மீது எந்தவிதமான விரோதமும் பாராட்டவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் வைத்து ஆய்வாளர் என்னிடம் விசாரித்தாரா என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்த அன்று என் தம்பி முக்காணிக்கு வந்தாரா என்றால் வரவில்லை. எங்கள் ஊரில் தக்காளிகோனார் குடும்பம் என்று ஒரு குடும்பம் உள்ளது என்றால் சரிதான். தக்காளிகோனார் குடும்பத்திற்கும், எனது தம்பிக்கும் நிலத்தகராறு இருந்தது என்றால் இல்லை. அ.சா.10 மாரியப்பன் எனது சொந்த தம்பி சின்னதம்பியின் மகன் என்றால் சரிதான். சின்னதம்பி, இறந்துபோன மாடசாமி, நான் ஆகியோர்கள் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். இறந்துபோனவருக்கு சம்மந்தமான எல்லா

பிரச்சனைகளும் மாரியப்பனுக்கும் தெரியும் என்றால் அவனுக்கு தெரியாது. அ.சா.10 மாரியப்பன் இந்த வழக்கில் ஒரு சாட்சி என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். 03.06.2015 அன்று கோவில் கொடையில் நடந்த சம்பவம் பற்றி போலீசில் புகார் கொடுக்கவில்லை என்றும், அது சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை என்றாலும் சரிதான். கோவில் கொடையில் நடந்தது அப்பட்டமான பொய் என்பதால்தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 10.06.2015 அன்று தூத்துக்குடி அத்திமரப்பட்டியில் உள்ள எனது வயக்காட்டை பார்ப்பதற்கு சென்றுவிட்டு எனது தம்பி வீட்டிற்கு சென்றிருந்தேன் என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அத்திமரப்பட்டி விலக்கு என்பது அத்திமரப்பட்டி ரோடும், திருசெந்தூர்–தூத்துக்குடி மெயின்ரோடும் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். அத்திமரப்பட்டி விலக்கில் வைத்துதான் எனது தம்பிக்கு முதல் வெட்டு விழுந்தது என்றால் சரிதான். ஒரு மாதத்திற்கு எத்தனை நாள் அத்திமரப்பட்டிக்கு போவேன் என்றால் நான் தினசரி வயலுக்கு அத்திமரப்பட்டிக்கு போவேன். வயலுக்கு போய்விட்டு வரும்போது தனியாக பஸ் ஏறி வருவேன் என்றால் எனது தம்பி கொண்டு விடுவான். 10.06.2015 அன்று நான் அத்திமரப்பட்டிக்கு போகவும் இல்லை என்றாலும், என் தம்பியிடம் பேசவும் இல்லை என்றாலும், என்னை பஸ் ஏற்றிவிட அ.சா.1,2,3 என்னுடன் வரவில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோன எனது தம்பியை எந்த சந்தர்ப்பத்திலும் அப்பா என்று அழைக்கும் பழக்கம் கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விசாரணையில் இறந்துபோனவரை அப்பா என்று எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொன்னது கிடையாது என்றால் சரிதான். என் தம்பி பிள்ளைகளை நான் போகாதீர்கள் என்று தடுத்தேன். நான் தடுத்ததால் வெட்டு விழுவதை தடுப்பதற்காக என்

தம்பி பிள்ளைகள் போகவில்லை என்றால் சரிதான். என்னை எதிரிகள் தாக்குவதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அணிந்திருந்த துணிகளில் ஒரு சொட்டு இரத்தமும் படவில்லை என்றால் சரிதான். ரொம்பநாள் ஆனாலும் அரிவாள்கள் யார் யார் கையில் இருந்தது என்று என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சான்று பொருள் 8,9,10 அரிவாள்கள் சம்பவ இடத்தில் எதிரிகள் கையில் இருந்தது என்பது பொய் என்றால் சரியல்ல. சா.பொ. 8 முதல் 10 அரிவாள்கள் இறந்துபோனவரை தாக்குவதற்கு பயன்படுத்தியது அல்ல என்றால் சரியல்ல. அ.சா.13,14, 15, 16 உடைகள் எதிரிகளுக்கு சொந்தமானது அல்ல என்றால் சரியல்ல. அந்த உடைகளை எதிரிகள் எந்த சந்தர்ப்பத்திலும் அணிந்தது கிடையாது என்றால் சரியல்ல. 1,2,3 எதிரிகள் அரிவாளுடன் தம்பியை மறிக்கவும் இல்லை என்றாலும், எதிரிகள் என் தம்பியை வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்பதும், நாங்கள் தடுக்க செல்லும்போது அரிவாள்களை கொண்டு மிரட்டிவிட்டார்கள் என்பதும், 2 பைக்கில் ஏறி தப்பி சென்றுவிட்டார்கள் என்பதும் பொய் என்றால் சரியல்ல. இறந்துபோனவருக்கு நிறைய விரோதிகள் உண்டு என்றாலும், அந்த விரோதத்தின் அடிப்படையில் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார் என்றாலும் சரியல்ல. சம்பவத்தை நான் மற்றும்அ.சா.1,2 பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. 2,3 எதிரிகள் எனது தம்பியின் அடாவடிதனத்தை தட்டிக்கேட்பதால் ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக பொய்யாக இந்த வழக்கில் சேர்த்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

**S.C.No. 198/2025 நாள் 28.04.2026 PW5– திரு. பரமசிவம்**

(சாட்சி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை CRL.OP(MD) No.2645/2024 வழக்கில் 02.04.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, நீதிமன்றத்தில் மீண்டும் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

எனக்கு மாலைக்கண் வியாதி உண்டு என்றால் சரிதான். அதனால் எனக்கு பார்வை தெளிவாக தெரியாது என்றால் சரிதான். முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை ஆய்வாளர் விசாரிக்கும்வரை வேறு யாரிடமும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு ஊர் முக்காணி என்றால் சரிதான். தக்காளிகோனார் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. 03.06.2015 அன்று கிடா வெட்டுநடந்தது என்றும், அப்போது 1வது எதிரியிடமிருந்து அரிவாளை பிடிங்கி விட்டார் என்பதும், 1வது எதிரியிடம் 2வது எதிரி அரிவாளை பிடிங்கி விட்டானே எட்டாம் பூஜை அன்று பார்த்துக்கொள்வோம் என்று மிரட்டினார் என்பதும், சண்டைபோடாதீர்கள் என்று அருகில் இருந்தவர்கள் சத்தம் போட்டு விலக்கிவிட்டார்கள் என்பதும், 10.06.2015 அன்று முக்காணி மெயின்ரோட்டில் வயலுக்கு போவதற்காக நின்று கொண்டிருந்தேன் என்பதும், எதிரிகள் 3 பேரும் கையில் அரிவாளுடன் சுமார் 5 மணியளவில் இன்றைக்கு பார்த்துக்கொள்வோம் என்று சொல்லிவிட்டு வடக்காக தூத்துக்குடி ரோட்டை பார்த்து சத்தம்போட்டு சென்றார்கள் என்பதும் பொய் என்றால் சரியல்ல. அன்றையதினம் இரவு 9.00 மணியளவில் எதிரிகள் மூவரும், மாடசாமி என்ற கோபாலை வெட்டி கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்பதும் பொய் என்றால் சரியல்ல. எனக்கு கண் பார்வை சரியாக தெரியாத காரணத்தினால் பைக்கில் ரோட்டில் யார்

சென்றார்கள் என்று எனது பார்வைக்கு தெரியாது என்றும், இறந்துபோனவர் எனது நெருங்கிய உறவினர் என்பதால் இந்த வழக்கில் கூடுதல் வலு சேர்ப்பதற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>